## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண். 16/2019

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு அக்டோபர் மாதம் 01 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வெங்கடேசன் | மதம் | : இந்து |
| த/பெ | : வேணுகோபாலன் | ஜாதி | : -- |
| வயது | : 51 | கிராமம் | : பெரியகடம்பூர் |
| தொழில் | : தனியார் நிறுவனம் | வட்டம் | : திருத்தணி |

**01.10.2024**

**வா.சா. 1 ன் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். வாதி தரப்பு 1ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் பிரமாண வாக்குமூலத்தை தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்குத் தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். பட்டா எண்.319ல் எனக்கு கிரையம் கொடுத்த வெங்கடேசனின் தகப்பனார் ரங்கசாமி என்பவர் பெயரில் உள்ள பட்டா அசல் தாக்கல் செய்கிறேன்.**(பட்டா வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 07.08.2018ம் தேதியிட்டு வெங்கடேசன் வகையறா எனக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன்.**(கிரைய ஆவணம் வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வழக்கு சொத்திற்கான வில்லங்க சான்று இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன்.**(வில்லங்க சான்று வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வழக்கு சொத்திற்கான புல வரைபடம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன்.**(புல வரைபடம் வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பிராதுப்படி தீர்ப்பு செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

(குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)